1968 மார்ச் 28] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சாதாரணமாகச் செய்கின்ற குடும்பக் கார்டு முறையில் ரேஷன் வழங்க உடனடியாக சர்க்கார் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து பரிசீலனை செய்து விவாதிக்க இந்த சபையின் அலுவல்களை அரை மணி நேரம் ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே தான் விவாதத்தில் இதைப்பற்றிக் கூறியதாக இப்போதுதான் சொன்னார். இதைப்பற்றி பேரவையிலே முன்னாலே பேசியிருக்கிறார். It shall not revive discussion of a matter which has been discussed in the same session என்ற முறையில் தள்ளிவிடும்படியான காரியமாக இருந்திருக்கிறது. சட்டப் பேரவை விதி 68 (3) உள்விதி (6), இது ஏற்கெனவே பேரவையில் பேசியது என்று சொல்லிவிட்ட காரணத்தால் இதை அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

(iv) வடுகக்குடி கிராம அரிசனங்கள் குடிசைகளுக்குத் தீவைப்பு

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, சபையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்கக் கோரி ஓர் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"நன்னிலம் தாலுக்கா, வடுகக்குடி கிராமத்திலுள்ள அரிசன மக்களின் குடிசைகளுக்கு தீ வைத்ததன் விளைவாக எல்லாக் குடிசைகளும் எரிந்து சாம்பலாகி அதனால் அரிசன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றி விவாதிக்க வேண்டி, சபையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்க வேண்டுமாக கோருகிறேன்."

தலைவர் அவர்களே, வடுகக்குடி கிராமத்திலுள்ள அரிசன சேரி மக்களின் குடிசைகள் எல்லாம் தீ விபத்தால் சாம்பலாகி, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக விவாதிப்பது நல்லது என்று கருதுகிறேன். ஆகவே, இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாதலால், 50 (viii) விதியின்படி இதை அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(v) தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டதும் தொழிலாளர் வேலை இழப்பும்

திரு. எம். பூபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன்படி கீழ்காணும் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்.

"கோவை ஜில்லா, தாராபுரத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையை மூடி 450-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த இந்த பிரச்சினையைப் பற்றி சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒற்றிவைத்து விவாதிக்கக் கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற நிர்வாகம் சாதாரண முதலாளிகளால் நடத்தப்படவில்லை. கூட்டுறவால் நடத்தப்படு கின்ற ஒரு ஸ்தாபனம். அவர்களே இப்படிப்பட்ட பேச்சு வார்த்தைகளை நடத்தி, பிரச்சினையைப்பற்றி முடிவு எடுக்க வேண்டியவர்கள். சர்க்கார் இலாக்காவினர் சமரசம் செய்து வைத்து, லேபர் ஆபீசர் தலையிட்டு, பேசி முடிவு செய்து ஏற்றுக் கொண்டவைகளையும் அமல்படுத்த முடியாது என்று சொல்லி யில்லை மூடிவிட்டார்கள். அதன் விளைவாக அங்கு ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களின் மத்தியில் ஆத்திரமும், அதிருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அவை நடவடிக்கைகளை ஒற்றிவைத்து இதைப்பற்றி விசாரிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இருப்பதால் இதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

(vi) செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலக ஊழியர்கள் நடத்தப்பட்ட விதம்

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-வதின்கீழ் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயமாகிய, "செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கும் ஊழியர்களை தவறான முறையில் நடத்தியதைப்பற்றி விவாதிக்க பேரவையின் அலுவலை ஒத்தி வைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கும் ஊழியர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் திங்கட்கிழமை அன்று கலெக்டருடைய பி.ஏ. அவர்கள் தங்களைக் கேவலமான முறையில் நடத்துகின்றார் என்ற காரணத்திற்காக ப்யூன் தவிர— சிரஸ்தார்களில் இருந்து எல்லா ஊழியர்களும் ஒரு நாள் காஷுவல் லீவ் போட்டுவிட்டு வேலைக்கே போகாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அவர் ஊழியர்களை எவ்வளவு கேவலமான முறையில் நடத்தி வந்திருந்தால் அவ்வளவு ஆத்திரமும், ஆவேசமும், அதிருப்தி மனப்பான்மையும் எற்பட்டி ருக்கும் என்பது புரிகிறது. இது சம்பந்தமாக கலெக்டரிடத்தில் கூறியிருக்கிறார்கள், சீப் செக்ரட்டரியிடத்தில் கூறியிருக்கிறார்கள், ரெவின்யூ அமைச்சரிடத்திலும், சீப்மினிஸ்டரிடத்திலும் கூறி யிருக்கிறார்கள். இந்த நிலை வெடித்து மாநிலம் முழுவதும் பரவி விடுமோ என்கிற அச்சம் ஏற்படுகிறது. மேலும், அந்த பி.ஏ.,